Register No. | | | | | | | | |

SD

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

4580–20

# B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.

(Five-year Regular Course)

## Fourth Year – Seventh Semester

## ADMINISTRATIVE LAW

Time : Three hours

Maximum : 100 marks

### PART A — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding 6 pages each.**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் கீழ்கண்டவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Discuss the two principles of Natural Justice citing relevant cases.
   பொருத்தமான வழக்குகளை எடுத்துக்காட்டி இயற்கை நீதிக் கோட்பாடு இரண்டினை விவாதிக்க.

2. Discuss with the help of decided cases, the judicial control over delegated legislation in India.
   இந்தியாவில், விதியாக்கத்தின் மீதுள்ள நீதிமன்ற கட்டுப்பாட்டை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விளக்குக.

3. Critically examine the government's liability for the torts committed by its servants.
   தன் ஊழியர்களால் செய்யப்பட்ட தீங்குச் செயல்களுக்கு அரசின் பொறுப்பைக் கூர்ந்தாராய்க.

4. What is "Ombudsman"? Write an essay on similar institutions in India and Britain.
   மக்கள் தீர்ப்பாயம் என்பது யாது? இந்தியாவிலும், இங்கிலாந்திலும் உள்ள அதையொத்த நிறுவனங்களைப் பற்றி வரைக.

5. Examine the concept of Rule of Law.
   சட்டத்தின் ஆட்சி கருத்தமைவினை ஆராய்க.

### PART B — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each :**
   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

   (a) Ultra –vires
   வரம்பு மீறல்

   (b) S.P .Gupta vs. Union of India.
   எஸ்.பி. குப்தா எதிர் இந்திய அரசு

   (c) Donoughmore committee.
   டோனாரக்மோர் குழு

   (d) Henry VIII Clause
   எட்டாம் ஹென்றி விதி

   (e) Speaking orders
   காரணம் விளம்பும் ஆணை

   (f) Domestic tribunal
   உள்ளுறை தீர்ப்பாயம்

   (g) New Despotism.
   புதிய கொடுங்கோன்மை

   (h) Colourable exercise of power.
   போலித்தோற்ற அதிகார ஆற்றுமுறை

   (i) Ouster of Jurisdiction.
   அதிகார வரம்மை விலக்கல்

   (j) Writ of Quo warranto
   தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Disciplinary proceedings were pending against a government servant, but he was allowed to retire from service. Later the government wants to continue the disciplinary proceedings. Advise the government servant.

ஒரு அரசு அதிகாரிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை பூர்த்தியாகாத நிலையில் இருக்கும் பொழுதே அவர் பணியிலிருந்து ஓய்வு பெற அரசு அனுமதித்தது. பின்னர் அவர் மீது அரசு அந்த ஒழுங்கு நடவடிக்கையை தொடர விரும்புகிறது. அரசு அலுவலருக்கு அறிவுரை வழங்கவும்.

8. The Revenue Minister of a State 'B', cancelled A's licence for the lease of certain land. 'A' challenges the decision on the ground that there was political rivalry between him and the minister. Decide.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் குத்தகையைச் சார்ந்த 'A'–யின் உரிமத்தை 'B' அரசின் வருமானத்துறை அமைச்சர் தள்ளுபடி செய்தார். தமக்கும் அந்த அமைச்சருக்கும் அரசியலில் போட்டி என்ற காரணம் காட்டி இந்த முடிவை 'A' குற்றஞ்சாட்டினார். தீர்ப்பு அளிக்கவும்.

9. Santhanam was injured by the heap of sand and gravel, left on the road by the road contractor. Santhanam filed a suit for damages against the state. Decide, citing relevant cases.

சாலை போடும் ஒப்பந்தக்காரரால் சாலையில் போடப்பட்டிருந்த மணல் மற்றும் சரளைக் கல் குவியல் ஒன்றினால் சந்தானம் காயம் அடைந்தார். அரசிற்கு எதிராக இழப்பீடு கோரி சந்தானம் ஒரு வழக்கு தொடர்ந்தார். தொடர்புடைய வழக்குகளை குறிப்பிட்டு தீர்ப்பளிக்கவும்.

10. A State Government issued a notification excluding an area from the territorial jurisdiction of a Grama Sabha and included the same in another Grama Sabha. The action of the Government was challenged on the ground that the residents of the particular area were not heard before issuing the notification. Decide.

ஒரு ஊரகத்தில் அடங்கியுள்ள ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை அதிலிருந்து பிரித்து மற்றொரு ஊரகத்தில் சேர்ப்பதற்கான அறிவிப்பை ஒரு மாநில அரசு வெளியிட்டது. அக்குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களை கேட்காது அத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால் அரசின் இச்செயல் செல்லத்தகாதது என மறுதலிக்கப்படுகிறது–தீர்மானி.

11. In a Parent Act there is a provision to publish the delegated legislation in local Tamil daily before implementation. But the government published the delegated legislation in an English daily. Decide the validity of the delegated legislation.

முதன்மை சட்டத்தின் கீழ் அரசால் ஆக்கப்படும் விதிகளை அவைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன் உள்ளூர் தமிழ் நாளேட்டில் வெளியிட வேண்டும் என சட்டம் வகை செய்கிறது. ஆனால் அரசானது அதை ஒரு ஆங்கில நாளேட்டில் வெளியிடுகிறது. அளிப்படைவு விதிகளின் செல்லும் நிலைமையை ஆராய்க.

12. A student was permitted to write University examination at the end of the course. The university cancelled his examination on the ground that he was admitted to the examination in spite of shortage of attendance. The student approached the High Court.– Decide.

மாணவர் ஒருவர் பயிற்சி படிப்பு முடிந்து நடைபெறும் பல்கலைக்கழகத்தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட்டார். அவர் வகுப்பிற்குப் போதிய வருகை புரியாததால் அவர் எழுதிய பல்கலைக்கழகத்தேர்வை, பல்கலைக்கழகம் ரத்து செய்து விடுகிறது. அம்மாணவர் உயர்நீதிமன்றத்தினை அணுகினார். முடிவு காண்க.

---

FSA

Register No. | | | | | | | |

4579–20

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

## B.A. B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

## BANKING LAW

Time : Three hours  Maximum : 100 marks

### PART A — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding 6 pages each.**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain about the RBI's control over Banking Industry.
வங்கித் துறையின் மீதான ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடு பற்றி விளக்குக.

2. "The relationship of Banker and Customer differs according to the services rendered by the bank to its customer". – Analyse.
"வங்கியாளர் வாடிக்கையாளர்களுக்கு செய்யும் சேவைகளைப் பொறுத்து வங்கியாளர் வாடிக்கையாளர் உறவு முறை மாறுபடுகிறது" – ஆராய்க.

3. What are the rights and duties of a Banker and explain the rule laid down in Clayton's case.
ஒரு வங்கியரின் உரிமை மற்றும் கடமைகள் என்னவென்று கூறி கிளைட்டன் வழக்கு விதியினை விளக்கவும்.

4. What is meant by Negotiable Instruments? Explain the characteristic features of Negotiable Instruments?
மாற்றுமுறையாவணங்கள் என்றால் என்ன? மாற்றுமுறையாவணங்களின் சிறப்பியல்புகளை விளக்குக.

5. Define 'Holder'; Discuss the rights of a Holder in Due course.
'உடைமையுரியவர்' வரையறை செய்க. உரிய முறை உடைமையுரியவரின் உரிமைகளை விவாதிக்கவும்.

### PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each.
பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக.

   (a) Describe different types of Bank Accounts.
   பல்வேறு வகையான வங்கிக் கணக்குகளை விவரி

   (b) Banking Instruments
   வங்கி ஆவணங்கள்

   (c) Special types of Banker's Customers
   வங்கியரின் சிறப்பு நிலை வாடிக்கையாளர்கள்

(d) Endorsement
மேற்குறிப்பு

(e) Devaynes vs. Noble
தேவய்னஸ் எதிர் நோபிள்

(f) Material alteration
கருநிலை திருத்தம்

(g) The Recovery of Debts due to Banks and Financial Institutions Act 1993.
வங்கிக்கான மற்றும் நிதி நிறுவனங்களுக்கான நிலுவைக் கடனை வசூலித்தல் சட்டம், 1993.

(h) Rights of the Paying banker
கொடுக்கும் வங்கியரின் உரிமைகள்

(i) Electronic Banking
மின்னணு வங்கியல்

(j) Electronic clearance system
மின்னணு தீர்வு சேவை

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

**பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்டவகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

7. A bill payable with interest at 12% per annum is altered into one payable with interest at 16% per annum. What is the effect of such alteration on the validity of the bill?

வருடத்திற்கு 12% வட்டியுடன் செலுத்தத்தக்க மாற்றுச்சீட்டு ஒன்று வருடத்திற்கு 16% வட்டியுடன் செலுத்தத்தக்கது என்று திருத்தப்படுகிறது. மாற்றுச்சீட்டின் செல்லத்தக்க தன்மையின் மீது மேற்கண்ட திருத்தத்தின் விளைவு யாது?

8. A bank sent a cheque of the customer for collection. The cheque was returned stating that it was dishonoured due to insufficiency of funds. The banker failed to return the cheque to the customer and intimate him regarding dishonour. State whether the customer has got remedy against the collecting bank for not intimating the dishonour of cheque and not returning the cheque to him.

ஒரு வங்கி தனது வாடிக்கையாளரின் காசோலை ஒன்றை வசூலுக்கு அனுப்புகிறது. அது போதிய பணமில்லை என்பதால் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது. இவ்வாறு காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட விவரத்தை வங்கி தனது வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கத் தவறியது. மேலும் அக்காசோலையை அவரிடம் திருப்பி கொடுக்கவும் இல்லை. காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டதை தெரிவிக்காமல் இருந்ததற்காகவும், காசோலையை திருப்பிக் கொடுக்காததற்காகவும் வசூலிக்கும் வங்கிக்கு எதிராக வாடிக்கையாளருக்கு தீர்வழி ஏதும் உண்டா என்பதைக் குறிப்பிடவும்.

9. "I promise to pay 'B' Rs.5,000 on C's death, provided 'C' leaves me enough property to pay that sum". Can it be treated as a promissory note?

"C என்பவர் இறக்கும் பொழுது அவர் அத்தொகையை செலுத்த போதுமான சொத்தை விட்டுச் சென்றால் நான் 'B' என்பவருக்கு ரூ.5,000-தை கொடுக்க உறுதியளிக்கிறேன்". இதனை கடனுறுதிச் சீட்டு எனக் கொள்ளலாகுமா?

10. A customer had Rs.3,000/- in his Savings account in a bank. In his another account in the same bank, same branch he took Rs.5,000/- as overdraft facility. The Bank combined these two accounts and claimed the remaining Rs.2,000/- from the customer. Decide.

ஒருவர் வங்கியிலிருந்து ஒரு கணக்கில் ரூ.5,000/- வரைப்பற்று மூலம் கடன் பெற்றிருந்தார். ஆனால் அதே வங்கியில் அதே கிளையில் அவரது சேமிப்புக் கணக்கில் ரூ.3,000/- உள்ளது. வங்கியாளர் இரு கணக்குகளையும் இணைத்து ரூ.3,000/-த்தை சரிகட்டிவிட்டு வாடிக்கையாளரிடமிருந்து எஞ்சியுள்ள தொகையான ரூ.2,000/- கோரினார். முடிவெடு.

11. Sundar was working in a public company. While he was in the job, he went abroad and he was remitting money to his bank account. The Public Company required some information about his account from the bank. The bank refused. Decide.

சுந்தர் என்பவர் ஒரு பொது நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார். அவர் பணியில் இருக்கும் போது வெளிநாடு சென்று அங்கிருந்து அவர் வங்கிக்கணக்கில் பணம் அனுப்பி வந்தார். பொது நிறுவனம் வங்கியிடம் அவர் வங்கிக்கணக்கு பற்றி தகவல் அறிய முற்பட்டது. வங்கி தகவல் தர மறுத்தது. முடிவெடு.

12. 'X' issued a cheque for Rs.1,999/- to 'Y'. 'Y' presented the cheque for payment in the bank. The bank wrongfully dishonoured the cheque. Discuss the liability of the bank.

'X' என்பவர் 'Y' என்பவருக்கு ரூ.1,999/-க்கான காசோலை ஒன்றை வரைகிறார். 'Y' அந்த காசோலையை வங்கியில் செலுத்தினார். வங்கி தவறுதலாக காசோலைக்கு மதிப்பு மறுத்தது. வங்கியின் பொறுப்பு என்ன?

---

FSC

Register No.

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.**

(Five - year Regular Course)

Fourth Year - Seventh Semester

## ENVIRONMENTAL LAWS

Time: Three hours Maximum: 100 marks

**PART A - (3 x 12 = 36 marks)**

**Answer THREE of the following in not exceeding 6 pages each.**

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. State the constitutional obligation of the State and the citizens' duty to protect the natural environment.

   இயற்கை சுற்றுச் சூழலை பாதுகாக்க இந்திய அரசியலமைப்பிலான அரசின் கடப்பாட்டினையும் மற்றும் குடிமக்களின் கடமைகளையும் குறிப்புரைக்க.

2. Discuss the Jurisdiction of National Green Tribunal in protecting environment.

   சுற்றுசூழலைப் பாதுகாப்பதில் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் ஆள்வரையினை விவாதிக்கவும்.

3. Discuss the recent guidelines relating to Environmental Impact Assessment.

   சுற்றுச்சூழலின் செயல் தாக்க மதிப்பீடு குறித்து சமீபத்திய வழி முறைகளை விவாதிக்கவும்.

4. Discuss the powers and functions of the Central Pollution Control Board under the Air Act, 1981.

   1981-ஆம் ஆண்டின் காற்றுச் சட்டத்தின் கீழ் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரம் மற்றும் செயல் திறன்களை விவாதிக்க.

5. Discuss the important International Instruments for the protection of environment.

   சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கான முக்கியமான சர்வதேச சட்டங்களை விவாதிக்கவும்.

**PART B-(8 x 6 = 48 marks)**

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each:

   பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்.

   (a) Precautionary Principle.
   முன்னெச்சரிக்கை நெறிமுறை.

   (b) Span Motel Pvt. Ltd.Case
   ஃபான் மோட்டல் பிரவெட் லிமிடெட் வழக்கு.

   (c) Mass Tort Action.
   பெருந்திரள் தீங்கு நடவடிக்கை.

(d) Noise Pollution Rules.
இரைச்சல் மாசு விதிகள்.

(e) Animal Welfare Laws.
விலங்குகள் நலச் சட்டங்கள்.

(f) National Environmental Policy.
தேசிய சுற்றுச் சூழல் கொள்கை.

(g) Protected Forests.
பாதுகாக்கப்பட்ட காடுகள்.

(h) Land Pollution.
நிலமாசு.

(i) Vellore Citizens Welfare Forum Case.
வேலூர் குடிமக்கள் நல வாரிய வழக்கு.

(j) Coastal Zone Management.
கடலோர மண்டல மேலாண்மை.

## PART C-(4x 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

7. The Government of Kerala decided to convert the open space in a residential area into another residential complex. The people residing in the area objected to the decision of the Government and approached the Court. Decide.

கேரள அரசு குடியிருப்பு பகுதியில் உள்ள திறந்த வெளியில் மேலும் ஒரு குடியிருப்பு வளாகம் அமைத்திட தீர்மானித்தது. அக்குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் மக்கள் அரசின் இம்முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தை அணுகினர். தீர்மானிக்க.

8. Central Railways proposed a mega project of laying 6,000 k.m., railway track through coastal line. Most of the railway line cover 350-450 meters from the coastal line. 'Makkal', an unregistered association objected this and approached the Court. Decide.

கடற்கரையோரத்தில் 6,000 கி.மீ. தூரத்திற்கு ரயில்பாதை அமைக்கும் ஒரு பெரும் திட்டத்தை மத்திய ரயில்வே உத்தேசித்தது. பெரும்பாலான வழித்தடங்கள் கடற்கரையிலிருந்து 350-450 மீட்டர் தொலைவிலேயே வந்தது. 'மக்கள்' என்ற ஓர் பதிவு செய்யப்படாத நிறுவனம் இதற்கு ஆட்சேபணை செய்து, நீதிமன்றத்தை அணுகியது. தீர்மானிக்க.

9. In a 'Jilla Parishad' premises, loud speakers were used for organizing wedding and other functions. Further enquiry revealed that this disturbed the residents. A Public Interest Litigation petition was filed before the High Court. Jilla Parishad contended that High Court does not have Jurisdiction. Decide.

"ஜில்லா பரிஷாத்" இடத்தில் திருமணங்கள் மற்றும் இதர விழாக் காலங்களில ஒலிபெருக்கி பயன் படுத்தப்பட்டது. அப்பகுதியில் விசாரணை மேற்கொண்ட பொழுது, இதன் பயன்பாடு அவ்விடத்தில் வசிக்கும் மக்களுக்கு பெரும் தொல்லையாக இருந்தது தெரிய வந்தது. ஆதலால் பொது நல வழக்கு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஜில்லா பரிஷாத் வாதத்தில் உயர் நீதிமன்றத்திற்கு ஆள்வரம்பு இல்லை என்றது. தீர்மானிக்க.

10. State of Andhra Pradesh proposed to establish new capital, Amaravati. Ravi, a social activist contended that the area is an Eco-fragile sensitive area comprising of fertile multicrop agricultural and wetlands near river Krishna and the Government actions are not in accordance with the guidelines of the Ministry of Environment and Forests. Decide.

ஆந்திர மாநிலம், அமராவதியைத் தனது புதிய தலைநகரமாக முன்மொழிந்தது. 'ரவி' என்ற சமூக ஆர்வலர் இப்பகுதியானது சுற்றுச் சூழல் பலவீனப் பகுதி எனவும் வளமான பல பயிர்கள் சாகுபடிச் செய்யப்படுகிறது எனவும் வேளாண் நிலங்களும் சதுப்பு நிலங்களும் உள்ளது எனவும் இதனருகே கிருஷ்ணா நதி உள்ளதால் இவ்விடத்தை தலைநகரமாக அறிவிப்பது சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் நெறிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல என வாதிட்டார். தீர்மானிக்க.

11. Chief Wildlife Warden granted fishing rights to tribals in a sanctuary. A Public Interest litigation petition was filed against the order of the Chief Wildlife Warden on the ground that it would affect the environment. Decide.

சரணாலயத்தில் பழங்குடியினருக்கு மீன் பிடிக்கும் உரிமைகளை வன விலங்கு தலைமைக் காப்பாளர் வழங்கினார். இச்செயல் அவ்விடத்தின் சுற்றுபுறச் சூழலை பாதிக்கின்றது என்று வனவிலங்கு தலைமைக் காப்பாளரின் ஆணையை எதிர்த்து பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்கவும்.

12. Mr.Kumar converted his agricultural lands into shrimp farming. The neighbouring farmers filed a writ and pleaded that the transformation of agricultural lands leads to salination of ground water. Mr.Kumar pleaded the right to livelihood. Decide.

திரு குமார் என்பவர் தன்னுடைய விவசாய நிலங்களை இறால் பண்ணையாக மாற்றினார். அப்பகுதி விவசாயிகள் இந்த மாற்றம் நிலத்தடிநீரை உப்பு நீராக்கி விடும் என்று கூறி நீதிப் பேராணையை தாக்கல் செய்தனர். திரு. குமார் தன்னுடைய வாழ்வுரிமையை வேண்டினார். தீர்மானிக்கவும்.

-----------

**FSB**

Register No. [ ]

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.A., B.L./B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.**

(Five - Year Regular Course)

Fourth Year / Seventh Semester

**LABOUR LAW - II**

Time: Three hours Maximum: 100 marks

**PART A – (3 x 12 = 36 marks)**

**Answer THREE of the following in not exceeding six pages each.**
**கீழ்க்கண்டவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

1. Explain the various benefits available under Employees State Insurance Act, 1948.

   தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டம், 1948ன் கீழ் வழங்கப்பட்டுள்ள பல்வேறு பயன்களை விளக்குக.

2. "Gratuity is no longer in the realm of charity but a statutory right given to the employee" - comment.

   "இனி பணிக்கொடை என்பது இரக்கப்படும் முதலாளிகளின் ஆட்சி எல்லைக்குல் அகப்படாது, தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமையாகும்" – கருத்துரை.

3. State the benefits available to a pregnant woman under Maternity Benefit Act, 1961.

   பேறுகால சலுகைகள் சட்டம் 1961ன் கீழ் ஒரு கர்ப்பிணி பெண்ணுக்கு வழங்கக் கூடிய நலன்கள் யாவை.

4. Explain disablement, quantum of compensation and its calculation under Employee's Compensation Act, 1923.

   உடல் தகுதி இழப்பு என்றால் என்ன? தொழிலாளர் இழப்பீட்டு சட்டம் 1923ன் கீழ் இழப்பீட்டின் அளவு மற்றும் கணக்கிடுததலை விளக்குக.

5. Define "Factory". Explain the provisions relating to health and safety of the workers under Factories Act, 1948.

   "தொழிற்சாலை" வரையறு. தொழிற்சாலைகள் சட்டம், 1948 கீழ் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் பற்றிய விதிகளை விளக்குக.

**PART B – (8 x 6 = 48 marks)**

6. **Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each:**
   **ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதவும்.**

   (a) Kinds of Bonus
   மீதூதியத்தின் வகைகள்

(b) Personal Injury
உடல் தீங்கு

(c) Site Apprisal committee
தள மதிப்பீட்டு குழு

(d) Manufacturing Process
தயாரிப்பு செயல்பாடு

(e) Employee's State Insurance Corporation
தொழிலாளர் காப்புறுதிக் கழகம்

(f) Continuous Service
இடையறாத சேவை

(g) Forfeiture of gratuity
பணிக்கொடை பறிமுதல் செய்தல்

(h) Restrictions on opening and closing of shopes.
கடைகள் திறக்கவும் மூடுவதற்குமான கட்டுப்பாடுகள்.

(i) Social security officer.
சமூக பாதுகாப்பு அதிகாரி.

(j) Employment of young person
இளம் நபர்களை வேலைக்கு அமர்த்துதல்

**PART C – (4 x 4 =16 marks)**

**Answer FOUR of the following (in not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

7. Usha is preparing sweets with the aid of gas during weekends. She engages ten workers only in weekend days and she engages 8 workers in all other days. Is it a manufacturing process of a factory – decide.

உஷா என்பவர் எரிவாயு கொண்டு இனிப்புகள் செய்கிறார். வாரமுடிவில் மட்டும் பத்து தொழிலாளிகள் ஈடுபடுத்துவார். இதர நாட்களில் 8 தொழிலாளர்கள் மட்டுமே ஈடுபடுத்துவர். இது தொழிற்சாலையின் உற்பத்திமுறை ஆகுமா – தீர்மானிக்க.

8. Kavitha was in Maternity leave during, such period she received a notice of dismissal from her employer. Discuss the effect of the notice of dismissal given to kavitha by the employer.

கவிதா என்பவர் மகப்பேறு விடுப்பில் இருக்கும் ஒரு தொழிலாளி. அக்காலத்தில் முதலாளி அவருக்கு பணி நீக்க அறிவிப்பு கொடுத்தார். இவ்வறிவிப்பின் செயல் திறனை விவாதிக்கவும்.

9. Ravi an employee was murdered in a communal riot while he was coming to his factory. The widow of the deceased employee claimed compensation. But the factory management refused. Decide.

ரவி என்ற தொழிலாளி தான் வேலை பார்க்கும் தொழிலகத்துக்கு வரும் பொழுது சாதிக்க கலவரகும்பல் ஒன்றால் கொல்லப்படுகிறார். அவருடைய விதவை மனைவி இழப்பீடு கோருகிறார். ஆனால் தொழிலாக நிருவாகம் மறுத்தது. முடிவு செய்க.

10. 'X', an employee of a company attained the age of superannuation and retired on 31.6.2018 after 25 years of continuous service. His last drawn salary was Rs. 10,000 per month. Is he entitled to claim gratuity?

'X' ஒரு நிறுவனத்தின் தொழிலாளி, வயது முதிர்வின் காரணமாக 25 வருட தொடர் பணிக்குப் பிறகு 31.6.2018ல் பணி நிறைவு செய்தார். அவர் இறுதியாக பெற்ற மாதஊதியம் 10,000 ஆகும். அவர் பணிக்கொடை கோர இயலுமா?

11. Kumar was dismissed from his service for riotous behaviour in the premises of the establishment. Whether Kumar is entitled to get bonus declared by the establishment – decide.

குமார் என்பவர் நிறுவனத்தினுள் கலகம் செய்ததால் அவரை நிறுவனம் வேலைநீக்கம் செய்தது. அவர் நிருவாகம் அறிவித்த மீதூதியம் பெற தகுதியானவரா முடிவு செய்க.

12. A Part – time doctor employed for an ambulance room as required under the factories Act, 1948. Decide whether he is an worker or not.

ஒரு பகுதி நேர மருத்துவர் 'ஆம்புலன்ஸ் அறையில் பணிபுரிகிறார் அவர் தொழிற்சாலைகளை சட்டம், 1948ன் கீழ் பணிஅமர்ததப்பட்டிருப்பின் அவர் தொழிலாளியா இல்லையா என்பதினை முடிவு செய்க.